**செய்தி வெளியீடு எண்: 307** **நாள்: 01.05.2020**

**செய்தி வெளியீடு**

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக **24.3.2020** முதல் **3.5.2020** வரை தமிழ்நாடு அரசால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மாநிலம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. **3.5.2020**க்கு பிறகு கடைபிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகளை வகுக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், கூடுதல் தலைமைச் செயலாளர் (நிதி) திரு எஸ். கிருஷ்ணன், இ.ஆ.ப., தலைமையில் 17 பேர் கொண்ட வல்லுநர் குழு அமைக்கப்பட்டது.

இக்குழு, சம்பந்தப்பட்ட துறை வல்லுநர்கள் மற்றும் அமைப்புகளிடம் (Stakeholders) கலந்தாலோசித்து, தனது இடைக்கால அறிக்கையை இன்று **(1.5.2020)** முகாம் அலுவலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தது.

இத்தருணத்தில் தலைமைச் செயலாளர் திரு. K. சண்முகம், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் (நிதி) திரு. எஸ். கிருஷ்ணன், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் (வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை) திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., முதன்மை செயலாளர் (தொழில்துறை) திரு. N. முருகானந்தம், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**